டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜு வ ல் ல ர் ஸ்

agridoctor.in | 22.11.2025 சனிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 127 - Madurai | Online Edition

# செம்மரங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளுக்கு தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் ரூ.38 கோடி நிதி விடுவித்துள்ளது

புது தில்லி, நவ.21

இந்தியாவின் பல்லுயிர் பெருக்க பாதுகாப்பு முயற்சியின் ஒரு பகுதியாக ஆந்திர மாநிலம் வனத்துறைக்கு தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் 38.36 கோடி ரூபாயை விடுவித்துள்ளது. செம்மரங்களை பாதுகாப்பதற்காக அம்மாநில பல்லுயிர் பெருக்க வாரியத்திற்கு, 1.48 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டு உள்ளது. இத்துடன் பல்லுயிர் பெருக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக பரஸ்பரம் பயன்பாட்டு பகிர்மானத்தின் அடிப்படையில் இதுவரை 110 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டு உள்ளது.

செம்மரங்கள் உலக அளவில் பிரபலமானதும் கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் இயற்கையாக வளரக்கூடியவை-யாகும். குறிப்பாக அனந்த்பூர், சித்தூர், கடப்பா, பிரகாசம் மற்றும் கர்னூல் மாவட்டங்களில் செம்மரங்கள் உள்ளன. ஆந்திர மாநில வனத்துறை சார்பில் பறிமுதல் செய்யப்பட்ட அல்லது ஏலம் விடப்பட்ட செம்மரக்கட்டைகள் மூலம் 87.68 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

இதுவரை தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, ஒடிசா மாநிலங்களைச் சேர்ந்த வனத் துறைக்கும், ஆந்திர மாநில பல்லுயிர் பெருக்க வாரியத்திற்கும் செம்மரங்களைப் பாதுகாப்பதற்காக 49 கோடி ரூபாய்க்கும் கூடுதலான தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

கூடுதலாக ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் உள்ள 198 விவசாயி களுக்கு 3 கோடி ரூபாய் நிதியுதவியும், தமிழ்நாட்டைச் சேர்ந்த 18 விவசாயிகளுக்கு 55 லட்சம் ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது.

# நான் முதல்வன் வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ் ஒரு வார கால உள்வளாகப் "படகு ஓட்டுநர் உரிமச் சான்றிதழ் படிப்புப் பயிற்சி"

தூத்துக்குடி, நவ.21

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தின் ஓர் அங்கமான மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மீன்பிடித் தொழில் நுட்பவியல் மற்றும் மீன்வளப் பொறியியல் துறையானது, நான் முதல்வன் வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ் சென்னையில் அமைந்துள்ள தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக நிதியுதவியுடன் நடத்தும் "படகு ஓட்டுநர் உரிமச் சான்றிதழ் படிப்புப் பயிற்சி' என்ற ஒரு வார கால உள்வளாகப் பயிற்சியானது 13.11.25 முதல் 20.11.25 வரை நடைபெற்றது.



இதன் நிறைவு விழாவானது 21.11.25 அன்று காலை 11.00 மணியளவில் தூத்துக்குடி மீன்பிடித் துறைமுக வளாகத்தில் அமைந்துள்ள மீன்வளத் தொழில் காப்பகம் மற்றும் தொழில்சார் பயிற்சி மையத்தில் வைத்து நடைபெற்றது.

இவ்விழாவில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த 8 மீனவர்கள் கலந்து கொண்டார்கள். மீன்பிடித் தொழில் நுட்பவியல் மற்றும் மீன்வளப் பொறியியல் துறையின் உதவிப் பேராசிரியர் மற்றும் பயிற்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர் ச.மாரியப்பன், வரவேற்புரை வழங்கினார். முனைவர் த.ரவிக் குமார், உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர் மீன்பிடித் தொழில் நுட்பவியல் மற்றும் மீன்வளப் பொறியியல் துறை, பயிற்சி விளக்கவுரையாற்றினார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

நிறைவு விழாவிற்கு கோ.து. கோபிநாத், துணை இயக்குநர், தமிழ்நாடு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, நாகர் கோவில், கன்னியாகுமரி மாவட்டம், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முயற்சிகளைப் பாராட்டிய அவர் இதுபோன்ற பயிற்சித் திட்டங்கள் அதிகமான மீனவர்களுக்கு நடத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மேலும், பயிற்சித் திட்டத்தை வெற்றிகரமாக முடித்த அனைத்து மீனவர்களுக்கும் படகு ஓட்டுநர் உரிமத்தை வழங்கினார். முனைவர் சா.ஆதித்தன், முதல்வர் (பொ), மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தலைமையேற்றார்.

தனது தலைமையுரையில், ஓட்டுநர் உரிமச் சான்றிதழ் திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் இந்தப் பயிற்சித் திட்டத்தை நடத்துவதற்கு தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தின் பங்கு குறித்து அவர் பேசினார்.




வெ.தீபா, உதவி இயக்குநர், தமிழ்நாடு மீன் வளம் மற்றும் மீனவர் நலத்துறை, சின்ன முட்டம், கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் எஸ்.பி. லட்சுமிகாந்தன், உதவி இயக்குநர், மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம், நாகர்கோவில் வாழ்த்துரை வழங்கினார்கள். அ.அந்தோணி மைக்கேல் பிரபாகர், உதவிப் பொறியாளர் நன்றியுரை ஆற்றினார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புதுறை இணை இயக்குநர் திடீர் ஆய்வு




திருவண்ணாமலை, நவ.21

திருவண்ணாமலை மாவட்டத்திற்கு விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறை இணை இயக்குநர் அ.சாந்தி, சென்னை, நேற்று விதைப் பரிசோதனை நிலையத்தை திடீரென ஆய்வு செய்தார். ஆய்வின் போது விதை முளைப்பு அறையில் வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தை கண்காணித்தார். ஈரப்பதம் கண்டறியும் கருவியின் மூலம் விதையின் ஈரப்பதம் பரிசோதனை செய்வதை ஆய்வு செய்தார். விதைபரிசோதனை பதிவேடுகள் பார்வை யிட்டார். ஆய்வக உபகரணங்கள் நல்ல முறையில் இயக்கு கிறதா என்பதை ஆய்வு செய்தார்.

விவசாயிகளுக்கு நல்ல தரமான விதைகளை கிடைக்க செய்ய சீரிய பணிகளை சிறப்புடன் செய்ய அறிவுரை வழங்கினார். ஆய்வகம் நல்ல முறையில் பாரமரிக்கப்படுகிறதா என்பதை ஆய்வு செய்தார். ஆய்வகம் தூய்மையாக உள்ளது என்பதையும் பரிசோதித்தார். ஆய்வகத்தில் பெறக்கூடிய அனைத்து விதை மாதிரிகளும் உடனுக்குடன் ஆய்வு செய்யப்பட்டு முடிவுகள் விரைவில் விவசாயிகளுக்கு எவ்வித தடையின்றி சேவை சென்றடைய வேண்டும் என்பதை வலியுறித்தினார். ஆய்வின் போது திருவண்ணாமலை விதைச்சான்று உதவி இயக்குநர் மற்றும் திருவண்ணாமலை விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் து.பத்மா மற்றும் இரா.கலைச்செல்வி, வேளாண்மை அலுவலர் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily





**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.

இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

நன்றி

# மிக நீண்ட இலை பருத்திக்கான சிறப்பு பயிற்சி

கோயம்புத்தூர், நவ.21

கோவை மாவட்ட வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையம் இணைந்து நடத்தும் பருத்திக்கான சிறப்பு திட்டத்தில் மிக நீண்ட இலை பருத்தியை பற்றிய பயிற்சி மதுக்கரை வட்டாரத்தில் உள்ள பச்சாபாளையம் கிராமத்தில் நடைபெற்றது.



இந்த பயிற்சியில் மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து வந்திருந்த விஞ்ஞானி முனைவர் சங்கர நாராயணன், மிக நீண்ட இலை பருத்திக்கான சாகுபடி முறை பற்றியும் அதில் தாக்கக்கூடிய பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்தக்கூடிய முறைகளையும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். மேலும் அவர் பருத்தியில் களைகளை கட்டுப்படுத்த பருத்திக் கான களைக்கொல்லியையும் விவசாயிகளுக்கு கூறினார். அதுமட்டு மல்லாமல் இயந்திரம் மூலம் அறுவடை செய்வது பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார்.

வேளாண் அறிவியல் நிலையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் சுரேஷ் குமார், மிக நீண்ட இலை பருத்தி சாகுபடி பரவலாக குறைந்து வரும் நிலையில் விவசாயிகள் அனைவரும் மிக நீண்ட இலை பருத்தி சாகுபடி செய்ய முன் வர வேண்டும் என்றும் இதில் அதிக லாபம் பெற முடியும் என்றும் விவசாயி களுக்கு கூறினார்.

இப்பயிற்சியில் 30-க்கும் மேற்பட்ட பருத்தி விவசாயிகள் கலந்து கொண்டு பருத்திச் செடிகளை நேரில் சென்று கள ஆய்வும் செய்து தங்கள் சந்தேகங்களை கேட்டு அறிந்தனர். இப்பயிற்சிக்கான முழு ஏற்பாடுகளையும் வேளாண் அறிவியல் நிலையத்தின் இளம் வல்லுனர்கள் ஏற்பாடுகளை செய்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# கோவையில் நடைபெற்ற தென்னிந்திய இயற்கை விவசாயிகள் மாநாட்டில் திருச்சி விவசாயிகள் பங்கேற்பு



திருச்சி, நவ.21

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பல்வேறு வேளாண் பயிற்சிகள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அவ்வப்போது நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக கோவையில் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்ற இயற்கை வேளாண்மை மாநாட்டுக்கு திருச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் இருந்து சுமார் 50-க்கும் மேற்பட்ட விவசாயிகளை வேளாண் அறிவியல் நிலையம் சார்பாக அழைத்துச் சென்று இயற்கை வேளாண்மை பற்றி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

கோயம்புத்தூரில் துவங்கப்பட்ட இந்த மாநாட்டை பாரத பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். இந்த உச்சி மாநாடு நிலையான, ரசாயனம் இல்லாத விவசாய நடை முறைகளை எடுத்துக்காட்டியது. விவசாயத்தின் முக்கியத்து வத்தையும், விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள் மூலம் சாத்தியமான சந்தை இணைப்புகள் மற்றும் மதிப்பு கூட்டல் ஆகியவற்றைப் புரிந்துகொள்ள இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ரசாயனங்களைச் சார்ந்திருப்பதைக் குறைத்தல் மற்றும் சுற்றுச்சூழல் நட்பு நடைமுறைகளை மேம்படுத்துதல் ஆகிய வற்றை நோக்கமாகக் கொண்ட உயிரி உள்ளீடுகள், மண் சுகாதார மேலாண்மை மற்றும் பூச்சி கட்டுப்பாடு, நமது பாரம் பரிய விவசாயம், அதனை மக்களிடம் அதிக அளவில் கொண்டு சேர்க்க சந்தைபடுத்துதல், வேளாண்மை உற்பத்தி பெருக்கம், மண் வளம், நச்சுத்தன்மை மற்றும் இயற்கை விவசாயத்தின்

முக்கியத்துவம், மண் மலட்டுத்தன்மை, நச்சுத்தன்மை, மற்றும் மக்களுக்கு ரசாயனத்தை மாற்றி பாரம்பரிய விவசாயம் மூலம் இயற்கை உணவுகளை வழங்குதல் உள்ளிட்ட இயற்கை விவசாய நுட்பங்களைப் பற்றிய நுண்ணறிவுகளை விவசாயிகள் பெற்றனர். இந்த மாநாடு நிலையான மற்றும் வளமான விவசாய எதிர்காலம் என்ற பரந்த தொலைநோக்குப் பார்வையுடன் இணைந்து, இயற்கை விவசாயத்தை முன்னேற்றுவதற்கான நடைமுறை நுண்ணறிவுகளையும் உந்துதலையும் அனைத்து விவசாயிகளுக்கு வழங்கியது.

விவசாய விஞ்ஞானிகள், இயற்கை ஆர்வலர்கள் இயற்கை விவசாயம் செய்யும் விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜா பாபுவின் ஒருங்கிணைத்தல்படி வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர்கள் முனைவர் நாகேஸ்வரி முனைவர் சகிலா, முனைவர் புனிதவதி ஏற்பாடுகளை செய்தனர்.

இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் ஒரு கண்காட்சி அரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பஞ்சகவ்யா மற்றும் பிற இயற்கை உரங்கள் மற்றும் தாவர பாதுகாப்புக்கான தயாரிப்புகளுடன் கூடிய கண்காட்சி அரங்கம், ஒருங்கிணைந்த பண்ணை முறை, பாரம்பரிய அரிசி வகைகள் மற்றும் இயற்கை விவசாயத்திற்கு அவற்றின் பங்களிப்பை சித்தரிக்கும் மருத்துவ தாவரங்கள் ஆகியவை பற்றி வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் மாநாட்டுக்கு வந்திருந்தவர்களுக்கு விளக்கம் அளித்தனர்.

வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் முனைவர் நாகேஸ்வரி தலைமையில் 50 விவசாயிகள் கோவை இயற்கை வேளாண்மை மாநாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டு பயன் பெற்றனர்.

மேற்கண்ட தகவலை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜா பாபு தெரிவித்தார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# சேலம் மாவட்ட வேளாண்மை துறையின் ஆய்வகங்களில் சென்னை வேளாண் இயக்குநரகத்தின் அதிகாரி ஆய்வு



சேலம், நவ.21

சென்னை வேளாண்மை இயக்குநரகத்தின் ஆராய்ச்சி பிரிவு வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பொறுப்பு) அறிவழகன், சேலம் மாவட்டத்தில் உள்ள உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், மண் பரிசோதனை நிலையம், திரவ உயிர் உரங்கள் உற்பத்தி மையம், பூச்சிகொல்லி பரிசோதனை நிலையம் மற்றும் உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களை நேரில் ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளின் உற்பத்தி முறைகள், திரவ நிலை உயிரியல் கட்டுப்பாட்டு காரணி உற்பத்தி தொடர்பான உபகரணங்களை நேரில் ஆய்வு செய்து தொழில்நுட்ப அறிவுரைகளை வழங்கினார். மேலும் மண் பரிசோதனை நிலையத்தில் மண் பகுப்பாய்வு முறைகளை பார்வையிட்டு விவசாயிகளுக்கு மண்பரிசோதனை அடிப் படையில் உரப்பரிந்துரை செய்யவும், மண்ணில் உள்ள கரிம சத்தை அதிகரிக்கவும் திட்ட இலக்கினை காலத்தே முடிக்கவும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரை வழங்கினார்.

திரவ உயிர் உர உற்பத்தி மையத்தை ஆய்வு செய்து உயிர் உரங்களின் தரம் கார அமிலநிலை திரவ உற்பத்தி முறைகள் மற்றும் தரத்தினை ஆய்வு செய்து திரவ உயிர் உரங்களை விவசாயிகளுக்கு காலத்தே கிடைத்திடும் பொருட்டு வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு விநியோகிக்குமாறு அறிவுறுத்தினார்.

பூச்சிக்கொல்லி மற்றும் உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களை ஆய்வு செய்து பெறப்பட்ட பூச்சிக்கொல்லி மற்றும் உரமாதிரிகள் குறிப்பிட்ட காலத்திற்குள் ஆய்வு செய்யப்பட்டு முடிவுகள் உரிய காலத்திற்குள் அனுப்படுவதை கூடுதல் கவனம் செலுத்தி கண்காணிக்கவும் NABL - National Accreditation Board for Testing and Calibration Laboratories தரக்குறியீடு பெறப்பட்ட ஆய்வக பணிகளை ஆய்வு செய்து 2025-26 ஆம்

ஆண்டிற்கான திட்ட இலக்குகளை காலத்தே முடிக்கும்மாறு அறிவுரை வழங்கினார்.

மேற்கண்ட இந்த ஆய்வின் போது நீலாம்பாள், வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்), சேலம், அருணா, வேளாண்மை உதவி இயக்குநர், சேலம், கௌதமன், வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுபாடு) சேலம், நடன சபாபதி, வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு), கடலூர் மற்றும் சேலம் ஆய்வக பிரிவு வேளாண்மை அலுவலர்கள் உடனிருந்தனர்.




# கிராமந்தோறும் 'ஸ்டார்ட் அப்' நிறுவனம் தொடங்க திட்டம் தெரியுமா?




தமிழகத்தில் கிராமங்களில் வசிக்கும் பலரிடம் தொழில் துவங்க ஆர்வம் இருந்தும் சரியான வழிகாட்டுதல் இன்றி போதிய வேலை இல்லாத நிலையில் தான் உள்ளனர். இன்றைய காலகட்டத்தில் படித்த இளைஞர்கள் போதிய வேலை வாய்ப்பின்றி சிரமப்படுவதை நாம் கண்கூடாக பார்க்கிறோம். இன்றைய கால கட்டத்தில கிராமங்கள் படிப்படியாக நகரங்களை நோக்கி செல்லுவதை தடுக்கவும் காந்தி கண்ட கிராம ராஜ்ஜியம் மீண்டும் மலரவும் கிராமங்கள் தோறும் (START AP) நிறுவனம் (T.N) என்ற புத்தொழில் நிறுவனம் தொடங்க அரசு திட்டமிட்டுள்ளது.

**புத்தொழில் (ஸ்டார்ட் அப்) ?**

ஸ்டார்ட் அப் என்பது அதன் ஆரம்ப கட்டங்களிலிருக்கும் புதிய வணிகமாகும், இது புதிய யோசனைகள், புதுமையான தயாரிப்புகள் (அல்லது) வேலை கனவுகளை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது. ஸ்டார்ட் அப் திட்டங்கள் வாயிலாக தொழில் முனைவோருக்கு மானியத்துடன் கூடிய நிதிஉதவி மற்றும் பயிற்சி இன்னும் பிற ஆதரவுகளை மாநில ஸ்டார்ட் அப் (START UP T.N) வழங்குகிறது.

தமிழகத்தில் சமீபகாலமாக 12060 ஸ்டாட் அப் நிறுவனங்கள் உள்ளன. இவை அனைத்தும் நகர்ப்புறங்களில் உள்ளன. கிராமப்புறங்களில் ஆர்வம் உள்ள இளைஞர்கள் இருந்தும் தங்களுடைய தொழில்நுட்ப ஐடியாக்களை செயல்படுத்த முடியாத நிலையில் உள்ளனர். எனவே தமிழக அரசு புத்தொழில் திட்டத்தில் முதற்கட்டமாக இளைஞர்களிடம் கருத்து கேட்டு சிறந்த தொழில் ஆலோசனை அடிப்படையில் 100 கிராமங்கள் தேர்வு செய்ய முடிவு செய்துள்ளதாக தெரிகின்றது.

**யாருக்கு தொழில் தொடங்க முன்னுரிமை தரப்படும்?**

இத்திட்டத்தில் கிராமப்புறங்களில் உள்ள ஆண், பெண்களில்

சிறந்த தொழில் ஐடியா வைத்திருப்போரை கண்டறிந்து புத்தொழில் தொடங்குவதை ஊக்குவிக்கிறது. பெண்கள் மாற்று திறனாளிகள் எஸ்சி–எஸ்டி பிரிவினருக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

**தொழில் தொடங்க என்ன செய்ய வேண்டும்?**

ஒரு கிராமத்தில் ஒருவர் தேர்வானலும் அவரின் நிறுவனத்தை மத்திய தொழில் மற்றும் வர்த்தக அமைச்சகம் கீழ் செயல்படும் தொழில் மற்றும் உள் நாட்டு வர்த்தக ஊக்குவிப்பு துறையில் பதிவு செய்ய அரசு உதவும்.

**நிதி உதவி பற்றி தெரியுமா – தொழில் தொடங்க?**

ஆரம்ப கட்ட செலவுக்கு 1 லட்சம் நிதியுதவி வழங்கப்படும். தமிழக புத்தொழில் ஆதார நிதி திட்டத்தில் ஆண்களுக்கு 10 லட்சம் ரூபாயும் பெண்களுக்கு 15 லட்சமும் வழங்கப்படுகிறது.




இதை தவிர சந்தை வாய்ப்பு (MARKET INTELLIGENCE) முதலீடு இலக்கு உள்ளிட்ட தொழில்நுட்ப உதவிகள் மாவட்ட புத்தொழில் மையம் வாயிலாக வழங்கப்படும். இனியாவது கிராமங்களில் தமிழகம் முழுவதும் பாரபட்சமின்றி படித்த இளஞர்களிடம் நேரடியாக விருப்பம் கேட்டு அதனுடைய அடிப்படையில் சிறந்த தொழில்நுட்ப ஐடியாக்களின் அடிப் படையில் தேர்வு செய்ய மாநில மாவட்ட பூத்தொழில் நிறுவனம் முடிவு செய்துள்ளதாக தெரிகிறது.

கிராமங்களில் புத்தொழில் புதுமை தொழிலாக மலர நாமும் உதவிடுவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்து பயிற்சி




மதுரை, நவ.21

மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்கான மக்காச் சோளம், பருத்தி மற்றும் நெல் பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்து பயிற்சி மற்றும் நல்லமரம் கிராமத்தில் வயலாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இப்பயிற்சி வேளாண்மை உதவி இயக்குநர் மா.விமலா, தலைமையில் நடைபெற்றது. வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் முனைவர் நளினி, வேளாண் பயிர்கள் மற்றும் தோட்டக்கலை பயிர்களை தாக்கும் முக்கியமான பூச்சி மற்றும் நோய்கள் குறித்தும் மேலாண்மை முறைகள் குறித்தும் விரிவாக கூறினார்.




நல்லமரம் கிராமத்திற்கு வயல் ஆய்வு மேற்கொண்டு மக்காசோளம், பருத்தி மற்றும் நெல் வயல்களில் பூச்சி மற்றும் நோய் தாக்கிய செடிகளை கண்டறிந்து காரணிகள், தடுக்கும் முறைகள் குறித்து அலுவலர்களுக்கு செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.


கல்யாண்
ஜு வ ல் ல ர் ஸ்
Toll Free No. 1800 - 4257333

# துத்தநாக சத்து பற்றாக்குறை சரிசெய்தல் – ஒரு பார்வை



திருச்சி, நவ.21

தற்போது நடவு செய்த சம்பா மற்றும் தாளடி நெற்பயிரில் துத்தநாக சத்துப் பற்றாக்குறையானது தென்படுகின்றது. அதன் அறிகுறியானது செம்பழுப்பு நிறத்தில் உருவமற்ற புள்ளிகள் தென்படும். இலைப்புள்ளி நோயானது எள் வடிவத்தில் சிறு புள்ளியாக கூட்டமாக இருக்கும்.



துத்தநாக சத்து பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட வயலில் அதன் அறிகுறி யானது நடவு செய்த 20 நாள் முதல் 40 வரை தென்படும். பயிரானது வளர்ச்சி குன்றி காணப்படும். துத்தநாக சத்துப் பற்றாக்குறையினை தவிர்ப்பதற்கு நடவு செய்த 10 வது நாளில் ஏக்கருக்கு 10 கிலோ ஜிங்க் சல்பேட் 20 கிலோ மணலில் கலந்து இட வேண்டும். ஒரு வேளை இட தவறினால் நெல் நூண்ணூட்டம் ஏக்கருக்கு 5 கிலோ 20 கிலோ மணலில் கலந்து இடவேண்டும் அல்லது கீலேட்டட் EDTA 12 சதம் ஜிங்க் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 முதல் 1.5 கிராம் கைதெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும்.

களர் மற்றும் உவர் நிலங்களில் தண்ணீரில் கரையக்கூடிய துத்தநாகத்தினை இலை வழியாக தெளிக்க வேண்டும். இவ்வாறு லால்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சத்யபிரியா தெரிவித்தார்.




# நாட்டுக்கோழி பண்ணைப்பள்ளி செயல் விளக்கத்திடலில் - வயல்விழா கொண்டாட்டம்

ஈரோடு, நவ.21

ஈரோடு மாவட்டம், சென்னிமலை வட்டாரம், வேளாண்மை துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் இலாபகரமான பண்ணைக்கோழி வளர்ப்பு பண்ணைப் பள்ளி தென்முகம் வெள்ளோடு வெட்டுக்காடு சக்திவேல் தோட்டத்தில் 25 விவசாயிகளுக்கு செயல்விளக்கத் திடல் அமைத்து ஆறு வகுப்புகள் மூலம் நாட்டுக்கோழி வளர்ப்பு தொழில்நுட்பங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டது.

சென்னிமலை வட்டார விவசாயிகள் அறிந்து கொள்ளும் வகையில் வயல் விழா கொண்டாடப்பட்டது. இது குறித்து சென்னிமலை வேளாண்மை உதவி இயக்குனர் (பொ) சசிகலா, வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது. விவசாயி களுக்கு கூடுதல் வருமானம் அளிக்கும் உபதொழில் ஆன நாட்டுக்கோழி வளர்ப்பு தொழில்நுட்பங்கள் பண்ணைப்பள்ளி மூலம் விவசாயிகளுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டது. செயல் விளக்கத்திடல் விவசாயின் அனுபவங்களை வட்டார அளவில் உள்ள விவசாயிகள் அறிந்து கொள்ளும் வகையில் வயல் விழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு அருள் வடிவு துணை இயக்குனர் (உ.ப.நி மற்றும் மத்திய திட்டம்) தலைமையேற்று சிறப்புரையாற்றும் போது அட்மா திட்டத்தின் மூலம் விவசாயி களுக்கு வழங்கப்படும் பல்வேறு பயிற்சிகள், கண்டுணர் சுற்றுலாக்கள், செயல் விளக்கங்கள் மூலம் பல்வேறு புதிய தொழில்நுட்பங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தப் பட்டு வருவதால் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த வழி காட்டுகிறது. மேலும் மத்திய மாநில அரசு திட்டங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியங்கள் குறித்தும் பிரதம மந்திரியின் விவசாயிகள் ஊக்கத்தொகை திட்டம் குறித்தும் தெளிவாக எடுத்துரைத்தார். டாக்டர் தாமோதரன், கோழியின் நோய் பரிசோதனை மற்றும் கண்காணிப்பு ஆய்வகம் ஈரோடு, பேசும்போது இறைச்சி மற்றும் முட்டை தேவைக்கான நாட்டுக் கோழி இனங்கள், வளர்ப்பு கொட்டகை அமைக்கும் முறைகள்,

குஞ்சுகள் பராமரிப்பு முறைகள், கோழிகளைத் தாக்கும் நோய்கள் மற்றும் அதன் அறிகுறிகள் மற்றும் வழங்கப்பட வேண்டிய மருந்துகள், தடுப்பூசி அட்டவணை, தீவன மேலாண்மை முறைகள் குறித்து விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துரைத்தார். மேலும் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு தெளிவாக விளக்கமளித்தார்.

டாக்டர் ராஜா, உதவி கால்நடை மருத்துவர், வெள்ளோடு, கால்நடை பராமரிப்புத் துறை மூலம் வழங்கப்படும் மானியத் திட்டங்கள் குறித்தும் விவசாயிகளின் கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம் அளித்தார். அனுமன்பள்ளி யூனியன் வங்கி வேளாண்மை அதிகாரி விவசாயிகளுக்கு வழங்கப்படும் வங்கி கடன் விபரங்கள் குறித்து தெளிவாக எடுத்துரைத்தார்.




வயல்விழாவில் கலந்து கொண்ட விவசாயிகள் செயல் விளக்கதிடலில் அமைக்கப்பட்ட கொட்டகை முறை மற்றும் தென்னந்தோப்பில் வளர்க்கப்படும் நாட்டுக்கோழி ரகங்களான அசில், கிராம பிரியா, கடக்நாத், சோனாலி கோழி வளர்ப்பு பண்ணையை பார்வையிட்டு சக்திவேலிடம் கலந்துரையாடி தெளிவான விளக்கம் பெற்றனர்.

இவ்விழாவில் சென்னிமலை வட்டாரத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட நாட்டுக்கோழி வளர்ப்பில் ஆர்வம் உள்ள விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இவ்விழாவில் வேளாண்மை உதவி இயக்குனர் (பொ) சசிகலா, தமிழரசு விதை சான்று அலுவலர் பெருந்துறை, அருள்செல்வன், உதவி தோட்டக்கலை அலுவலர், சென்னிமலை உட்பட பலர் கலந்து கொண்டு தங்கள் துறை சார்ந்த திட்டங்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை பெ. மோகனசுந்தரம் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சென்னிமலை சிறப்பாக செய்திருந்தார்.

# எள் சாகுபடியில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை

## உரமும் உரமிடுதலும்

**தொழு உரம் :** எக்டருக்கு12.5 டன் மக்கிய தொழு உரம் கடைசி உழவிற்கு முன்பு இடவும்.

**இரசாயன உரம்**

- மண் பரிசோதனைப்படி உரமிடுதல் சிறந்தது.



**மானாவாரி :** எக்டருக்கு 23:13:13 கிலோ தழை, மணி, சாம்பல் சத்து (அ) 17:13:13 கிலோ தழை, மணி, சாம்பல் சத்துடன் 3 பாக்கெட் அசோஸ்பைரில்லம் (600கி/எக்டர்) மற்றும் 3 பாக்கெட் (600 கிராம் /எக்டர்) பாஸ்போபேக்டீரியா (அ) 6 பாக்கெட் அசோபாஸை (1200 கிராம்/எக்டர்) இட வேண்டும்.

**இறவை :** எக்டருக்கு 35:23:23 கிலோ தழை, மணி, சாம்பல் சத்து (அ) 21:23:23 கிலோ தழை, மணி, சாம்பல் சத்துடன் 3 பாக்கெட் அசோஸ்பைரில்லம் (600கி/எக்டர்) மற்றும் 3 பாக்கெட் (600 கிராம் /எக்டர்) பாஸ்போபேக்டீரியா (அ) 6 பாக்கெட் அசோபாஸை (1200 கிராம்/எக்டர்) இட வேண்டும்.

● ஒரு எக்டருக்கு தேவையான விதையை 125 மி.லி. திரவ அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பேக்டீரியா கொண்டு விதை நேர்த்தி செய்து, 30 நிமிடங்கள் நிழலில் காய வைத்து பின் விதைக்க வேண்டும்.

● தழை, மணி, சாம்பல் சத்து முழுவதையும் அடியுரமாக அளிக்க வேண்டும்.

● எக்டருக்கு 5 கிலோ மாங்கனீஸ் சல்பேட்டை சேர்த்து கொள்ளவும்.

● பரிந்துரைக்கப்பட்ட 100% தழை, மணி, சாம்பல் சத்தினை அளித்த நிலக்கடலை பயிரை தொடர்ந்து இறவை எள் பயிரிடும் போது, பரிந்துரைக்கப்பட்ட உரங்களில் தழைச்சத்து முழுவதையும், 50% மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்தினையும் இட வேண்டும்.

● 30 செ.மீ. இடைவெளியில் 5 செ.மீ. ஆழத்தில் வாய்க்கால் தோண்டி உரக்கலவையினை அதில் இட்டு, 3 செ.மீ. ஆழத்திற்கு மண் கொண்டு மூட வேண்டும்.

● இவ்வாறு வாய்க்காலில் இடவில்லை எனில், உரங்களை சீராக படுக்கையின் மீது தூவ வேண்டும்.

● எக்டருக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் நுண்ணூட்டக்கலவை 7.5 கிலோவை செறிவூட்டப்பட்ட தொழுவுரமாக மானாவாரி எள்ளுக்கும், 12.5 கிலோவை செறிவூட்டப்பட்ட தொழுவுரமாக இறவை எள்ளுக்கு இட வேண்டும். (ஊட்டமேற்றிய தொழுவுரம் தயாரிக்க 1:10 என்ற விகிதத்தில் நுண் உரக்கலவை மற்றும் தொழுவுரத்தை சேர்த்து தகுந்த ஈரப் பதத்தில் ஒரு மாதம் நிழலில் உலர்த்தவும்) என சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெ.விமலா தெரிவித்தார்.

# உலக மீன்வள தினத்தை முன்னிட்டு 'உபரிமீன் பிடிப்பைத் தவிர்க்கும் சாதனங்கள் மூலம் வளங்குன்றா மீன்பிடிப்பை மேம்படுத்துதல்" பற்றிய ஒரு நாள் விழிப்புணர்வு முகாம்

தூத்துக்குடி, நவ.21

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தின் ஓர் அங்கமான மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மீன்பிடித் தொழில் நுட்பவியல் மற்றும் மீன்வளப் பொறியியல் துறையானது, உலக மீன்வள தினத்தை முன்னிட்டு 'உபரி மீன் பிடிப்பைத் தவிர்க்கும் சாதனங்கள் மூலம் வளங்குன்றா மீன்பிடிப்பை மேம்படுத்துதல்" பற்றிய ஒரு நாள் விழிப்புணர்வு முகாமானது 21.11.25 மதியம் 12.00 மணி அளவில் தூத்துக்குடி மீன்பிடித் துறைமுக வளாகத்தில் அமைந்துள்ள மீன்வளத் தொழில் காப்பகம் மற்றும் தொழில் சார் பயிற்சி மையத்தில் வைத்து நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 25 மீனவர்கள் கலந்து கொண்டனர்.



மீன்பிடித் தொழில்நுட்பவியல் மற்றும் மீன்வளப் பொறியியல் துறையின் உதவிப் பேராசிரியர் ச.மாரியப்பன் வரவேற்புரை வழங்கினார். முனைவர் த.ரவிக்குமார் உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர், ன்பிடித் தொழில் நுட்பவியல் மற்றும் மீன்வளப் பொறியியல் துறை, விழிப்புணர்வு முகாமின் நோக்கத்தை பற்றி விளக்கவுரையாற்றினார். அவர் வளங் குன்றா மீன் பிடிப்பை மேம்படுத்துதல் பற்றிய கருத்தை விரிவாக எடுத்துரைத்ததுடன், மீனவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

முனைவர் சா.ஆதித்தன், முதல்வர் (பொ), மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், இவ்விழாவிற்கு தலைமை யேற்றார். அவர் தனது தலைமை உரையில் கடல் உயிரியல் வளங்களைப் பாதுகாக்க மீனவர்கள் பொறுப்புடனும் நிலைத்தன்மையுடனும் மீன்பிடி நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என வலியுறுத்தினார்.

மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் விஞ்ஞானி மற்றும் நிலையத் தலைவர் முனைவர் எல்.லவ்சன் எட்வர்ட் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார். தனது உரையில் கடலில் உபரிமீன் பிடிப்பைத் தவிர்க்கப் பயன்படுத்தப்படும் சாதனங்கள் குறிப்பாக கடல் ஆமை வெளியேற்றும் சாதனம், அவற்றின் செயல்முறை, பயன்பாட்டு முக்கியத்துவம் ஆகிய வற்றை விரிவாக விளக்கினார்.

மேலும் கடல் ஆமைகள், டால்பின்கள், திமிங்கலங்கள் போன்ற அழியும் நிலையிலுள்ள இனங்கள் தவறுதலாக மீன் வலைகளில் பிடிபடுவதிலிருந்து பாதுகாக்க இச்சாதனங்களின் பயன்பாடு எப்படி உதவுகிறது என்பதையும் சுட்டிக்காட்டினார்.




மேலும் கடல் உயிரினங்களைப் பாதுகாப்பதில் மீனவர்கள் முக்கிய பங்காற்ற வேண்டும் என்றும் எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் உபரி மீன் பிடிப்பைத் தவிர்க்கும் சாதனங்கள் பற்றிய துண்டு பிரசுரம் வெளியிடப்பட்டது.

நிகழ்ச்சியின் இறுதியில் பங்கேற்ற மீனவர்களிடையே கடல் உயிரினங்களைக் காக்கவும் வளங்குன்றா மீன்பிடிப்பை மேம்படுத்துதலை ஊக்குவிக்கவும் உறுதிமொழி எடுக்கப்பட்டது. மீன்பிடித் தொழில்நுட்பவியல் மற்றும் மீன்வளப் பொறியியல் துறைபணியாளர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் பயிற்சி ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# Rithvik Pipe

## 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




### பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# கிராமப்புற இளைஞர்களை தொழில்முனைவோர் ஆக்கும் இயற்கை இடுபொருட்கள் தயாரித்தல் பற்றிய பயிற்சி

திருச்சி, நவ.21

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் சார்ந்த பயிற்சிகள், செயல்முறை விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக கிராமப்புற இளைஞர்களை தொழில் முனைவோர் ஆக்கும் நோக்கத்திலும் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்கத்திலும் இயற்கை இடுபொருட்கள் தயாரிக்க கூடிய பயிற்சி வருகின்ற 24.11.25 திங்கட்கிழமை அன்று வேளாண்மை அறிவியல் நிலையம், சிறுகமணியில் நடைபெற உள்ளது.




இந்த நிகழ்ச்சியில் நபார்டு வங்கியின் முன்னாள் தலைவர் முனைவர் நாகூர் அலி ஜின்னா, கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளார்.

கலந்து கொள்ள விரும்பும் ஆர்வமுள்ள இளைஞர்கள் வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு காலை 9.30 மணி அளவில் வருகை புரியுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறது.

மேற்கண்ட தகவலை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப் பாளர் முனைவர் சி.ராஜா பாபு (91717 17832) தெரிவித்தார்.

# ஆணை கொம்பன் ஈ தாக்குதல் மேலாண்மை முறைகள் : வேளாண்மை உதவி இயக்குநர் ஆலோசனை



புதுக்கோட்டை, நவ.21

பயிரினை தாக்கும் ஆனைக் கொம்பன் ஈயினை கட்டுப்படுத்திட புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி வேளாண்மை உதவி இயக்குநர் சு. ராதாகிருஷ்ணன் ஆலோசனை தெரிவித்துள்ளார், இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, தற்போது நிலவும் தட்பவெப்ப நிலையால் மணமேல்குடி வட்டாரத்தில் சாகுபடி செய்துள்ள நெற்பயிரில் ஆனைக் கொம்பன் ஈ தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனைக்கொம்பன் பூச்சியானது நெற் பயிரின் தூர்களின் குருத்து பகுதியை தாக்குவதால் பாதிக்கப்பட்ட இலையானது வெங்காய இலை போன்று மாறிவிடும். ஈ வகையை சேர்ந்த இந்த பூச்சியானது மஞ்சள் கலந்த பழுப்பு அல்லது இளஞ் சிவப்பு நிறமாகவும், கொசுவை போல் சிறியதாகவும், நீண்ட மெல்லிய கால்களுடன் இருக்கும். இதனுடைய புழுப்பருவம் பயிர்களை தாக்குவதனால் தூர்களுக்கு பதிலாக கொம்பு போன்ற கிளைப்புகள் தோன்றும். இந்த கிளைப்புகள் வெண்மையாகவோ அல்லது இளஞ்சிவப்பு நிறமாகவோ குழல் போன்று வெங்காய இலையைப் போல காணப்படும். இதை பார்ப்பதற்கு யானையின் கொம்பை போல் இருப்பதனால் இது ஆனைக் கொம்பன் என்று அழைக்கப்படுகிறது.

தாய்ப்பூச்சியானது நீளமான உருளை வடிவிலான பளப்பளப் பான முட்டைகளை இலையின் அடிப்பகுதியில் இடும். இதிலிருந்து வெளியாகும் புழுக்கள் நெற்பயிரின் குருத்துக் களை துளைத்து குழல்களாக மாற்றி விடும். இதனால் பயிரில் நெற்கதிர்கள் உருவா காமல் விவசாயிகளுக்கு மகசூல் இழப்பு ஏற்படும். நெல் நடவு செய்த 35 முதல் 45 நாட்களில் தான் இந்த புழுக்களின் தாக்குதல் அதிகம் காணப்படும். எனவே, வயல்களை களைகள் இல்லாமல் தூய்மை யாக வைத்திருப்பதனாலும், புற ஊதா விளக்கு பொறிகளை வைத்தும், ஈக்களை கவர்ந்து அழிக்கலாம். தழைச்சத்து உரங் களை பரிந்துரைக்கப்பட்ட அளவில் பயன்படுத்தினால் இதன் தாக்குதலில் இருந்து நெற்பயிர்களை பாதுகாக்கலாம்.

மேலும், இப்பூச்சியின் தாக்குதல் பொருளாதார சேத நிலை அளவை (அதாவது 10 இலைக்கு ஒரு இலை வெங்காயத்தாள்) விட பாதிப்பு அதிகமாகும்போது மகசூல் இழப்பு ஏற்படும்.

இதனை கட்டுப்படுத்த பூச்சிக் கொல்லி மருந்துகளான கார்போ சல்பான் 25 சத ஈ.சி –300 மிலி அல்லது பிப்ரோனில் 5 சத எஸ்.சி – 400 மி.லி ஆகிய மருந்துகளில் ஏதேனும் ஒன்றை ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத் தெளிப்பான் கொண்டு தெளித்து கட்டுப்படுத்திடலாம். இதன் மூலம் விவசாயிகளுக்கு மகசூல் இழப்பு ஏற்படு வது தவிர்க்கப்படுகிறது. மேலும் தாக்குதல் தென்பட்டால் கூடுதல் விபரங்களுக்கு உடனடியாக அருகில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தினை அணுகிட கேட்டுக் கொள்ளப்படுகிறது. உடனடியாக அருகல் உள்ள வட்டார வேளாண் வரிவாக்க மையத்தினை அணுகிட கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

